தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 23 | அக்டோபர் 2023 | கனி 11



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

MONTHLY
THE WORD OF CHRIST

1


ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 46
தலைப்பு : பெத்தானியா மரியாள் – Mary of Bethany
வேத வாசிப்பு : லூக்கா 10:38-42



1. நளதம் என்னும் தைலத்தை பூசினாள் - மத்.26:7
2. லாசருவின் சகோதரி - யோவா.11:1.2
3. நல்ல பங்கை தெரிந்து கொண்ட மரியாள் - லூக்.10:38


மாத இதழுக்கான சந்தா செலுத்த மூன்று வழிகள்

G-Pay & PhonePe - 9443558041



India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001

The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946
Branch Batlagundu



JOIN OUR
WORLD EVANGELISM
BIBLE SCHOOL
RIGHT NOW



Contact Us: 6379350509



## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்

Our TV Program: All Days of the Week

*Every Sunday, Thursday & Saturday 6.00 P.M on Heaven TV*

*Every Monday, Tuesday & Wednesday 6.00 P.M on Joy TV*

*Every Sunday, Friday & Saturday 8.30 P.M on Nithyam TV*

YouTube : the word of christ







**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை.
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 23 அக்டோபர் – 2023 கனி – 11


**ஆசிரியருரை**

## கர்த்தர் தம்மை தாமே ஒப்புக்கொடுத்த விதம்
## The Way, the Lord gave Himself



"**அ**வர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்யப் பக்திவைராக்கிய முள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்" என்று தீத்து 2:14-ல் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதை நாம் பரிசுத்த வேதாகமத்தில் படிக்கிறோம். இவ்வசனத்தில் மூன்று விதமான நோக்கத்தைப் பார்க்கிறோம். ஒன்று அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொள்ளவும். இரண்டாவது தமக்குரிய சொந்த ஜனங்களாக தெரிந்துகொள்ளவும். மூன்றாவது நற்கிரியைகளைச் செய்யப்பக்திவைராக்கிய முள்ளவர்களாக நிறுத்தவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் எனக் காண்கிறோம். இந்த நோக்கத்தை முதலாவது ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் அறிந்துகொண்டு, அந்த நோக்கத்தை கிறிஸ்தவ வாழ்க்கையில் நிறைவேற்றப்பாடுபடவேண்டும்.

**முதலாவது,** சகல அக்கிரமங்களினின்று நம்மை மீட்டுக்கொண்டார். அப்படியானால், நாம் முன்னே எப்படியிருந்தோம்? பவுல் சொல்கிறார்; "முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களை பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர் களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" என்கிறார் (கொலோ.1:21). ஆம், நாம் முன்னே தேவனுக்கு விரோதிகளாகவும், அவரை அறிகிற அறிவு இல்லாதவர்களாகவும் இருந்தோம். இப்படிப்பட்ட நம்மை இயேசுவினுடைய மரணத்தினாலே ஒப்புரவாக்கினார். மேலும் சொல்லும்போது; "அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கை யில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள்" என்பதை பவுல் நமக்கு நினைப்பூட்டுகிறார் (எபே.2:12). கிறிஸ்துவுக்கும் நமக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லாதவர்களாயிருந்தோம். அப்படியிருந்த நம்மை சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொள்ளும்படியாக இயேசுவை பிதாவாகிய தேவன் ஒப்புக்கொடுத்தார். அப்பொழுது நம்முடைய பாவங்கள் மிகவும் கொடூரமாகவும், ஒருவராலும் பரிசுத்தமாக்கக்

கூடாதவையாகவும் இருந்தது. ஏசாயா சொல்லும்போது; "வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போலவெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச்சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்" என்கிறார் (ஏசா.1:18). கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னித்து நம்மை ஏற்றுக்கொள்ள சித்தமாயிருந்தார். ஆகையால் எப்பேர்பட்ட பாவியும் கர்த்தராகிய இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே கழுவப்பட்டு தேவனுடைய பிள்ளையாக மாறும் பாக்கியத்தைப் பெறுகிறான். நீங்கள் இயேசுவின் இரத்தத்தினாலே மீட்கப்பட்டு உள்ளீர்களா? அவர் சிலுவையில் ஒப்புக்கொடுக்கப்பட்டதின் நோக்கம்: உங்களை சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொள்ளும்படியாக என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

**இரண்டாவது,** தமக்குரிய சொந்த ஜனங்களாக உங்களைத் தெரிந்துகொள்ளும்படியாக ஒப்புக்கொடுத்தார். இது குறித்து பேதுரு சொல்லும்போது; "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்கிறார் (1பேது.2:9). ஒவ்வொரு கிறிஸ்தவனும் இருளிலிருந்து வெளிச்சத்தின் பிள்ளையாக மாற்றப்படுகிறான். ஆகையால் அவன் ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்டவனாயிருக்கிறான். மேலும் அவன் பரிசுத்த ஜாதியாகவும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாகவும் இருக்கிறான். அவருக்குச் சொந்த ஜனமாக அவருடைய மந்தையில் சேர்க்கப்படுகிறான். இது எத்தனை ஆசீர்வாதமான பாக்கியம். இந்த பாக்கியத்தை அடையவேண்டுமானால்; ஒவ்வொருவரும் அவருடைய மந்தையின் ஆடுகளாயிருக்கவேண்டும். பவுல் சொல்லும்போது; "நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து" என எழுதுகிறார் (எபே.2:19).

முன்னே நாம் அந்நியர்களாயிருந்தோம். இப்பொழுதோ, அவரால் கழுவப்பட்டு, அவருக்குரிய சொந்த ஜனங்களாக தெரிந்துகொள்ளப்பட்டு இருக்கிறோம். ஆகையால் இனி நாம் அந்நியர்கள் அல்ல, தேவனுடைய வீட்டாராயிருக்கிறோம். உலகத்திலே அநேக கூட்டுக்குடும்பங்களைப் பார்க்கிறோம். எஸ்.கே குரூப்ஸ், எம். எம் குரூப்ஸ் இப்படி அநேக குரூப்ஸ் எழும்புகிறது. இவர்கள் எல்லோரும் கூட்டுக்குடும்பத்தார்கள் என அழைக்கப்படுகின்றனர். ஆனால் இக்கூட்டுக்குடும்பங்கள் நிலைத்திருக்கின்றனவா? இல்லை. நாளடைவில் சண்டையிட்டு பிரிந்துபோகிறார்கள். ஆனால் தேவனால் ஏற்படுத்தப்பட்ட வீடு என்றும் நிலைத்திருக்கிறது. அதற்கு தலையாக இயேசுவானவர் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். அந்த சந்ததி பரிசுத்த சந்ததியாகவும் தேவனை மகிமைப்படுத்துகிற சந்ததியாகவும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாகவும் இருக்கிறது. நீங்கள் அந்த சந்ததியில் உங்களை இணைத்துக்கொள்ளுங்கள். தமக்குரிய சொந்த ஜனங்களாக இருக்கும்படியாக அந்த சந்ததியை பிதாவாகிய தேவன் தெரிந்துகொண்டார். "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று

அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை" (1யோவா.3:1).

**மூன்றாவது,** நற்கிரியைகளைச் செய்யப்பக்திவைராக்கிய முள்ளவர்களாக இருக்கும்படியாக ஒப்புக்கொடுத்தார். நீங்கள் நற்கிரியைகளை செய்துகொண்டிருக்கிறீர்களா? அப்படியில்லை என்றால் இன்றே உங்களுடைய பணியை துவக்குங்கள். கர்த்தர் ஒப்புக்கொடுத்த விதத்தை நாம் ஒவ்வொரு நாளும் நிறைவேற்ற கடனாளிகளாயிருக்கிறோம். பவுல் தீத்துவுக்கு சொல்லும்போது; "துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்கவும், சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கவும், ஒருவனையும் தூஷியாமலும், சண்டைபண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு" என்கிறார் (தீத்து 3:1,2). உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இப்படிப்பட்ட உலகத்தில் கர்த்தருடைய அன்பையும் அவருடைய சகல விதமான நற்கிரியைகளையும் அவர்களுக்கு முன்பாக நாம் நடப்பிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். ஒவ்வொரு நாளும் கிறிஸ்தவர்களை இந்த உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது. ஆகையால் நாம் எல்லா மனுஷருக்கும் முன்பாக சாந்தகுணத்தைக் காண்பிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். ஒருவேளை உங்களுடைய நாவு உங்களுக்கு கீழ்படியா விட்டால் என்னுடைய நாவுக்கு காவல் வையும் ஆண்டவரே எனறு தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளுங்கள். ஏனென்றால், நாவு நெருப்புபோன்றது. நாவை அடக்க ஒருவனாலும் கூடாது அது பொல்லாங்கு நிறைந்தது என வேதம் சொல்லுகிறது. ஆகையால் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக சிருஷ்டிக்கப்பட்ட நாம் கிறிஸ்துவுக்கேற்ற கிரியைகளைச் செய்வோம்.

மேலும் பவுல் தீத்துவுக்கு சொல்லும்போது; "இந்த வார்த்தை உண்மையுள்ளது; தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி நீ இவைகளைக்குறித்துத் திட்டமாய்ப் போதிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்; இவைகளே நன்மையும் மனுஷருக்குப் பிரயோஜனமுமானவைகள்" என்கிறார் (தீத்து 3:8). மனிதர்கள் பெரும்பாலும் கர்த்தருக்காக எதையாவது செய்யவேண்டுமென்று எண்ணி கட்டிடங்களிலும், இடங்களிலும், அவரவர் பெயர் சொல்லும்படியாக செய்துவிடுகிறார்கள். ஆனால் தேவன் இவைகளை எதிர்பார்க்கவில்லை. அவர்களுடைய நற்கிரியைகளை எதிர்பார்க்கிறார். ஒரு கிறிஸ்தவானாக இருந்துகொண்டு கொள்ளையடிக் கிறவனாகவும், கொலை செய்கிறவனாகவும், பிறனுடைய பொருட்களை இச்சிக்கிறவனாகவும் வாழ்ந்துகொண்டிருந்தால் ஜனங்கள் அவனை சபிப்பார்கள். அவன் ஒரு சாட்சியுள்ள மனிதனாக கிறிஸ்துவை பிரதிபலிப்பவனாக வாழவேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். ஆகையால் தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய அவர்களுக்கு திட்டமாக போதிக்கவேண்டும். இவைகளின்படி ஒரு கிறிஸ்தவன் நடக்கும்போது அது அவனுக்கு பிரயோஜனமாக இருக்கும். அவனை கர்த்தர் அதிகமாக நேசிப்பார். அவனாலே அவனை சுற்றியுள்ள ஜனங்கள் கர்த்தரை அறிந்துகொள்ளுவார்கள். தேவனுடைய நாமம் மகிமைப்படும்.

எனவே "சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளுங்கள் " என கொலோ. 1:10-ல் காண்கிறோம். ஆம், சகல விதமான கனிகளைக் கர்த்தருக்குள்ளாக கொடுக்க முடியும். நீங்கள் கிறிஸ்துவோடும், கிறிஸ்துவானவர் உங்களோடும் இருந்தால் இந்தவிதமான கனிகளைக் கொடுக்கமுடியும். ஆவிக்குரிய கனிகள் ஒன்பதும் உங்களுடைய வாழ்க்கையில் காணப்படவேண்டும். கனியற்ற மரத்தை எந்த ஒரு தோட்டக்காரனும் வைத்திருக்கமாட்டான். அதை விரும்பாமல் வெட்டிப்போடும் படியாக முயற்சிப்பான். அதைப்போல தேவனுடைய சமுகத்தில் ஆவிக்குரிய கனிகளை கொடுக்காதவர்களாக இருப்போமானால் தேவன் நம்மை அவருடைய தோட்டத்திலிருந்து எடுத்துப்போடுவார். நாம் அவரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையவேண்டும். ஆகையால் அநுதினமும் வேதம் வாசிக்கும் பழக்கத்தை இன்றே துவக்குங்கள். அதைப்போல நேரம் கிடைக்கும்போதெல்லாம் தேவனை நோக்கி ஜெபியுங்கள். பிதாவே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்று கேளுங்கள். ஒவ்வொரு நாளும் நற்கிரியைகளை செய்யும்படியாக உங்களை தேவனுடைய சமுகத்தில் ஒப்புக்கொடுங்கள்.

நம்மை சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொள்ளும்படியாகவும், தமக்குரிய சொந்த ஜனங்களாயிருக்கும்படியாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாயிருக்கும்படியாகவும் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த இயேசுவின் நோக்கத்தை நிறைவேற்றும்படியாக உங்களையும் ஒப்புக்கொடுங்கள்.

**தேறின கிறிஸ்தவன் எந்தவிதமான சிந்தையுடையவனாயிருக்கவேண்டும்?**

கிறிஸ்துஇயேசுவிலிருந்த சிந்தையுடையவனாயிருக்கவேண்டும். அப்பொழுது பிசாசு அவனை மேற்கொள்ளமுடியாது. "ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்" என்கிறார் பவுல் (பிலி.3:15). உங்களுடைய சிந்தை எப்படிப்பட்டதாக இருக்கிறது? உலகப்பிரகாரமாக எதை வாங்குவோம், எதை விற்போம், என்னத்தை உடுத்துவோம், என உலகத்துக்குரிய காரியங்களை சிந்தித்துக்கொண்டு இருக்கிறீர்களா? உலகம் கொடுக்கக்கூடாத சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்க வல்லவராகிய இயேசுவுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். நீங்கள் தேர்ச்சியடைந்த கிறிஸ்தவராக இருந்துகொண்டு அநேகருக்கு முன்மாதிரியாக வாழுங்கள். உங்களுடைய வாழ்க்கை பிறருக்கும் முன் மாதிரியாக இருக்கட்டும். பவுல் கிறிஸ்து இயேசுவை என் சரீரத்திலே தரித்துக்கொண்டேன் என்றுசொல்வதைப்போல நீங்களும் உங்களை மறைத்து கிறிஸ்துஇயேசுவை தரித்துக்கொள்ளுங்கள். பெயரளவில் கிறிஸ்தவர்களா யிருப்பதைக்காட்டிலும் நடைமுறையில் ஜனங்கள் மத்தியில் கிறிஸ்துவை பிரதிபலிக்கிறவர்களாக வாழுங்கள். கிறிஸ்துவானவர் எப்பொழுதும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும்படியாக ஜெபித்துக்கொண்டிருந்ததைப்போல நீங்கள் ஜெபியுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# கர்த்தருடைய இராப்போஜனத்தின் துவக்கம்

## The Institution of the Lord`s Supper

-J.C.Choate



கர்த்தருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு முன்பே, கர்த்தர் தம்முடைய நினைவு கூருதலாகிய இராப்போஜனத்தைத் துவக்கினார். கர்த்தருடைய ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த போது சங்காரகாரன் அவர்களை சங்கரிக்காமல் கடந்துபோன நாளை நினைவு கூரும்படி வருடத்திற்கு ஒரு முறை பஸ்கா பண்டிகையை அநுஷ்டித்து வந்தார்கள். பஸ்காபண்டிகைக்கு இயேசுவும் அவருடைய சீஷர்களும் எருசலேமுக்குப் பயணம் செய்தனர். இயேசு உலகமெங்குமுள்ள தம்முடைய ஜனங்களால் தம்முடைய சரீரம் மற்றும் தம்முடைய இரத்தபலியின் நினைவாக வாரந்தோறும் நினைவு போஜனமாக மாறப்போகிற தம்முடைய இராப்போஜனப் பந்தியை ஆரம்பிக்க இத்தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டார். "அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இது முதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப்பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்"(மத்.26:26-29).

அந்த சமயத்தில் கர்த்தர் இன்னும் சிலுவையில் மரிக்கவில்லை என்பதை தயவுசெய்து கவனியுங்கள், ஆனால் அவர் தம்முடைய மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு தம்மை நினைவு கூருவதை அநுஷ்டிக்கும்படிக்கு இதை ஆரம்பித்தார். அத்தோடு கூட அவர் தாம் அவர்களோடேகூட தம்முடைய பிதாவின் ராஜ்யத்திலே பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்றும் குறிப்பிட்டார். அந்த ராஜ்யம் அல்லது சபை இன்னும் வராதிருந்தது, ஆனால் அது அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு வருவதாக இருந்தது. அப்போஸ்தலர் 2ல் குறிப்பிட்டுள்ளபடி பெந்தெகொஸ்தே நாளில் சபை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து, சீஷர்கள் அவருடைய இராப்போஜனத்தில் பங்குகொண்டு அந்த நாளை தொடர்ந்து அநுஷ்டித்து வருகிறபோது அவர் தம்முடைய ஜனங்களோடு இருப்பார்.

ஒரு சந்தர்ப்பத்தில் இயேசு, “ஜீவ அப்பம் நானே . உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார். அப்பொழுது யூதர்கள்:இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம்பண்ணினார்கள். அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன். ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறது போலவும்,என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான். வானத்திலிருந் திறங்கின அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப்போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார்” (யோவா.6:48-58).

தொடர்ந்து கூறும் கூற்று முழுவதிலும் இயேசு தம்முடைய வெளிப்படையான சரீரத்தைப்புசிப்பது குறித்தும் தம்முடைய வெளிப்படையான இரத்தத்தை பானம்பண்ணுவது குறித்தும் பேசிக்கொண்டிருக்கவில்லை. மாறாக, அவர் ஆவிக்குரிய காரியங்களை, அதாவது தம்முடைய சரீரத்திற்கு நினைவாக பிட்கப்படுகிற அப்பத்தைக் குறித்தும் தம்முடைய இரத்தினாலாகிய பாத்திரத்தைக் குறித்தும் பேசிக்கொண்டிருந்தார். சிலர் இன்று அப்பத்தில் பங்கு கொள்ளும் போது, அது இயேசுவினுடைய வெளிப்படையான மாம்சமாக மாறுகிறது என்றும், பாத்திரத்தில் அல்லது திராட்சரசத்தில் பங்கு கொள்ளும் போது அது இயேசுவின் உண்மையான இரத்தமாக மாறுகிறது என்றும் விசுவாசிக்கின்றனர். நிச்சயமாகவே இது உண்மையல்ல. இயேசு தம்முடைய ஜனங்கள் மாம்சத்தைத் தின்னும் பழக்கத்தில் ஈடுபடும்படி தம்முடைய இராப்போஜனத்தைப் பயன்படுத்தமாட்டார்.

இப்போது கிறிஸ்து சிலுவையில் மரித்தவராக, அடக்கம் செய்யப்பட்டவராக மேலும் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தவராக இருக்கிறார் மற்றும் இராஜ்யம் அல்லது சபையானது அவர் திட்டமிட்டபடி ஸ்தாபிக்கப்பட்டதுமாயிருக்கிறது. கர்த்தருடைய ஜனங்களாகிய, அவருடைய குடும்பமாகிய, சபை அங்கத்தினராகிய, நாம் அவருடைய இராப்போஜனத்தில்

பங்குகொள்ளும்படிக்கு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவருகிறவர்களாகயிருக்கிறோம். பவுலும் மற்ற கிறிஸ்தவர்களும் துரோவா பட்டணத்திலே அப்பம் பிட்கும்படி கூடிவந்திருந்த நிகழ்ச்சியை நாம் மாதிரியாகக் கொண்டிருக்கிறோம். வேதம், "வாரத்தின் முதல்நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்"(அப்.20:7) எனக் கூறுகிறது. வேதாகம பண்டிதர்கள் "அப்பம் பிட்குதல்" என்ற வார்த்தைகளை, வாரந்தோறும் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளும்படி சபை அநுஷ்டிக்கிறவற்றோடு ஒப்பிட்டு அங்கிகரித்துக் கொள்கின்றனர். கிறிஸ்து இராப்போஜனத்தைத் துவக்கினபோது, தம்மை நினைவுகூரும்படி தம்முடைய சீஷர்கள் இனி வரக்கூடிய நாட்களில் கூடிவரும்போது அவர்கள் மத்தியில் அவர் இருப்பார் என்று அவர் கூறியதையும் நீங்கள் நினைத்துப் பார்ப்பீர்கள். இன்னொரு சமயத்தில் இரண்டு அல்லது மூன்று பேராவது தம்முடைய நாமத்தில் எங்கே கூடுகிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் அவர் இருப்பார் எனச் சொன்னார் (மத்.18:20).

பவுல் கிறிஸ்தவர்கள் கூடிவந்திருந்த இடத்தில் வாரத்தின் முதல்நாளில் கலந்து கொண்டார் என்பதையும் தயவுசெய்து கவனியுங்கள். வாரத்தின் எந்த முதல் நாள்? ஒவ்வொருவாரத்தின் முதல் நாளில் கூடினார்கள்,மேலும் உடனுக்குடன் கிறிஸ்தவர்கள் ஆராதிக்கும்படியாகவும் கிறிஸ்துவின் இராப்போஜனபந்தியை நினைவு கூரும்படியாகவும் கூடிவந்தார்கள். பழைய ஏற்பாட்டின் கீழ் தேவனுடைய ஜனங்கள் ஏழாம்நாளை நினைவுகூரும்படி கட்டளை பெற்றிருந்தனர், ஆனால் எந்த ஏழாம் நாள்? ஒவ்வொரு ஏழாம் நாள். அந்தப்படியே கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் பங்குகொள்ளவும் வேண்டியவர்களாயிருக்கிறோம்.

பவுல் 1கொரிந்தியர் 11 -ம் அதிகாரத்தில் சபை அங்கத்தினர்களில் சிலர் எவ்வாறு கர்த்தருடைய இராப்போஜனத்தை அசட்டை பண்ணினார்கள் என்பது குறித்து பேசுகிறார். அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை சாதாரணமான தங்களுடைய சொந்த போஜனத்திற்கு மாற்றினார்கள். இது தவறானது. பவுல் அவர்களுக்கு அவர்களுடைய சொந்த போஜனத்தைப் புசிக்க அவர்கள் சொந்த வீடுகளைக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் அவர்கள் ஆராதிக்கக்கூடி வரும்போது கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்தத்தின் நினைவுகூருதலாக அப்பம் பிட்கும்படிக்கும் பாத்திரத்தில் பானம் பண்ணும்படிக்கும் கூடிவரவேண்டும், தங்களுடைய வயிறுகளை நிரப்ப சொந்த போஜனத்தைப் புசிக்க அல்ல என்று சொன்னார்.


மேலும், பவுல் "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்

பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன் படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.

இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணு கிறான்" (1கொரி.11:23-29) என தொடர்ந்து கூறினார்.

கொரிந்து சபை கிறிஸ்தவர்கள் இவ்வாறாக நினைவுறுத்தப் பட்டார்கள், நாமும் அவ்விதமாக, கர்த்தருடைய இராப்போஜனப் பந்தியில் பங்கெடுக்கும் போது நம்மை நாமே சோதித்தறிய வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒருவன் தேவனிடத்தில் விசுவாசமில்லாதவனாக இருந்தால், அவன் தேவனிடத்தில் மனந்திரும்பி தேவனுடைய மன்னிப்பைப் பெற வேண்டியது அவசியம். பாவம் வெளிப்படையாக இருக்குமானால் அவன் சபையாருக்கு முன்பாக, மனந்திரும்புதலை வெளிப்படுத்தும்படிக்கும், தன்னுடைய குற்றங்களை அறிக்கையிடும்படிக்கும், தன்னுடைய சகோதரரிடம் தன்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்வதற்கும் செல்ல வேண்டியது அவசியம். விசுவாசமுள்ளவராக, தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்பியவராக, மன்னிப்புக்கேட்டவராக இருக்கிறவர்கள் இராபோஜனத்தில் பங்குகொள்ள பாத்திரவான்களாக இருக்கிறார்கள். ஒருவன் தன்னை சோதித்தறிந்து, தன்னை சரிசெய்து கொள்ளாமல் இருந்தால், அவன் கர்த்தருடைய நாமத்திற்கு மகிமைக் குறைச்சலை கொண்டு வருகிறவனாகவும் தன்னை தண்டனைக்கு உட்படுத்துகிறவனாகவுமிருக்கிறான்.


நீங்கள். கிறிஸ்தவர்களா, கிறிஸ்துவின் சபை அங்கத்தினரா? அப்படியிருப்பீர்களென்றால், பின்பு ஆராதிக்கும்படிக்கு வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தருடைய ஜனங்களோடு, அவர் உனக்காகவும் உன்னுடைய இரட்சிப்பிற்காகவும் அவரையும் அவர் செய்து முடித்தவற்றையும் நினைவுகூரும் நோக்கத்திற்காக அசட்டைசெய்யாதபடி மிகுந்த பயத்தோடு கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளும்படி கூடி வரவேண்டும். இந்த வழிபாடு கர்த்தருக்குக் கனத்தையும் மகிமையையும் கொண்டுவருகிறது. மேலும் அவரிடத்தில் கொண்ட விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படிக்கு உங்களுக்கு பலத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கிறது.



சீகன்பால்குவின் புதியேற்பாட்டு முதற்பாகத்தின் முகப்பு—1714
(The title page of the first part of Ziegenbalg's New Testament)

# உன்னதமான தேவனுக்கு நன்றி செலுத்துவோம்


தமிழில் முதல் பரிசுத்த
வேதாகமம் வெளிவர
உதவியவர் சீகன் பால் ஆவார்.
அவர் புதிய ஏற்பாட்டின் முதல்
பிரதியை 1714ல் வெளியிட்டார்.
நாம் படத்தில் பார்க்கிற
பிரதிதான் இது. இன்று
லட்சக்கணக்கான வேதாகமம்
வெளிவர முதல் மைல்கல்லாக
இருந்தது. அதற்காக
தேவனுக்கு நன்றி
சொலுத்துவோம்.



இப்பிரதியின் நகலை நமக்கு
அனுப்பி உதவியவர்.
ஊ.அருள்ராஜ், சென்னை
அவர்களுக்கு தி வேர்ட் ஆப்
கிரைஸ்ட் சார்பாக மனமார்ந்த
நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறோம்.



**"உம்முடைய துவக்கம் அற்பமாயிருந்தாலும், உம்முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும்"**
**யோபு 8:7**




(சீகன் பால்கு மொழி பெயர்த்த மத்தேயு சுவிசேஷம். 5-ம் அதிகாரம்)

ப.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

27



### பரிசுத்த வேதாகமத்தில் ரூத்
### Ruth In The Holy Bible

1. இவள் ஒரு மோவாபிய ஸ்திரீ - ரூத் 1:4
2. நகோமியின் மருமகள் - ரூத் 1:8
3. ஓர்பாள் தன் மாமியை முத்தமிட்டுப்போனாள் ரூத்தோ அவளை விடாமல் பற்றிக்கொண்டாள் - ரூத்.1:14
4. உம்முடைய தேவன் என்னுடைய தேவன் - ரூத்.1:16
5. நகோமியினிடத்தில் செய்த உடன்படிக்கை - ரூத்.1:17
6. போவாசுடைய கண்களில் தயை - ரூத் 2:2
7. போவாசுடைய வாழ்த்துதல் - ரூத்.2:12
8. போவாஸ் ரூத்தை விவாகம் பண்ணினான் - ரூத்.4:13
9. ரூத் பெற்ற பிள்ளைக்கு ஓபேத் என்று பெயர் - ரூத்.4:17
10. ரூத் பெற்ற ஓபேத் ஈசாயைப் பெற்றான் ஈசாய் தாவீதைப் பெற்றான் - ரூத்.4:22

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

**இவளுடைய பெயர் புதிய ஏற்பாடு முதல் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறதா?**

**விடை:** ஆம் - "சல்மோன் போவாசை ராகாபினிடத்தில் பெற்றான்; பேவாஸ் ஓபேதை ரூத்தினிடத்தில் பெற்றான்; ஓபேத் ஈசாயைப் பெற்றான்" (மத்.1:5)



பு.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

28




### பரிசுத்த வேதாகமத்தில் யூதாஸ்
### Judas In The Holy Bible

1. கீரியோத் ஊரான் எனவே யூதாஸ்காரியோத் என்றழைக்கப்பட்டான் - யோவா.6:71
2. அவனை திருடன் என வேதாகமம் சொல்கிறது - யோவா.12:4
3. அப்போஸ்தருடைய பெயர்களில் லூக்கா இவனை துரோகியான யூதாஸ்காரியோத்து என்கிறார் - லூக்.6:16
4. இயேசுவைக் காட்டிக்கொடுக்க பேரம் பேசினான் - மத்.26:14,15
5. அந்த மனுஷன் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும் - மத்.26:24
6. அவரைக் காட்டிகொடுக்க சமயம் தேடினான் - மாற்.14:11
7. யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான் - யோவா.13:2
8. சங்கீதத்திலே சொல்லப்பட்டபடியாக அவனுடைய கண்காணிப்பை வேறொருவன் பெற்றான் - அப்.1:16
9. இவன் இழந்துபோன அப்போஸ்தலபட்டத்தை மத்தியா பெற்றான் - அப்.1:24
10. இவனுடைய முடிவு நான்றுகொண்டு செத்தான் - மத்.27:5

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

***ஏந்த தீர்க்கதரிசி சொன்னபடி அந்த வெள்ளிக்காசை எடுத்து குயவனுடைய நிலத்தைக் கொண்டார்கள்?***

**விடை:** எரேமியா - ..."கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி குயவனுடைய நிலத்திற்காக அதைக் கொடுத்தார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று" (மத்.27:9,10)



## இயேசுகிறிஸ்துவின் பிறப்பு முதல் அவருடைய உயிர்தெழுதல் வரை உள்ள இடங்கள் ஒரு கண்ணோட்டம்



தீர்க்கதரிசனத்தில் உரைக்கப்பட்டபடி இயேசுவானவர் யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறிதான ஊராகிய பெத்லகேமிலே பிறந்தார் என்ற செய்தி உலகறிந்த ஒரு உன்னதமான செய்தி. இந்தப்படம் அவர் பிறந்த இடத்தில் எடுக்கப்பட்ட படம் அதை இன்றுவரை பாதுகாத்து வருகிறார்கள். இயேசு உலகத்தில் பாவத்தில் வீழ்ந்துகிடக்கிற ஜனங்களை மீட்கும்படியாக உலகத்தில் வந்தார். பாவிகளை இரட்சிக்க தன் ஊயிரை சிலுவையில் விட்டார். அவர் சிந்திய இரத்தத்தினால் இன்று நாம் இரட்சிக்கப்படுகிறோம்.




மோசேயின் நாட்களில் நடந்ததுபோல அந்நாட்களில் இருந்த ஏரோது ராஜாவின் நாட்களில் நடந்தது. இயேசுவின் பிறப்பின்போது; கர்த்தருடைய தூதன் யோசேப்புக்குக் காணப்பட்டு "ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய் நான் உனக்குச் சொல்லும்வரைக்கும் அங்கே இரு என்றான்" (மத்.2:13). அந்தப்படியாக எகிப்திலே இருந்தார்கள். அந்த இடத்தைத்தான் நாம் பார்க்கிறோம். "தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு, மிகுந்த கோபமடைந்து, ஆட்களை அனுப்பி, ...பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொலைசெய்தான்" (மத்.2:16).



பின்பு ஏரோது இறந்தபின்பு யோசேப்பு "எழுந்து பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு இஸ்ரவேல் தேசத்துக்கு வந்தான். ....நாசரேத்து என்னும் ஊரிலே வந்து வாசம்பண்ணினான். நசரேயன் என்னப்படுவார் என தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது" (மத்.2:21-23). இன்று உள்ள எருசலேம் பட்டணத்தை நாம் இந்த படத்தின் முலமாக தெரிந்துகொள்கிறோம்.



அவருடைய ஊழியம் கலிலேயா கடலைச்சுற்றி இருந்தது. அதை சுற்றி அநேக பட்டணங்கள் இருந்தது. அவருடைய சொந்த பட்டணம் என்று சொல்லக்கூடிய கப்பர்நகூம் பட்டணத்தில் அநேக அற்புதங்களை இயேசு செய்தார். ஆனால் அவர்களோ அத்தனை அற்புதங்களையும் கண்டும் மனந்திரும்பாமற்போனார்கள் என்பது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. "நாசரேத்தைவிட்டு, செபுலோன் நப்தலி என்னும் நாடுகளின் எல்லைகளிலிருக்கும் கடற்கறைக்கு அருகான கப்பர்நகூமிலே வந்து வாசம்பண்ணினார்" (மத்.4:14)







ஆண்டவருடைய ஊழியத்தின் பாதையில் மலைப்பிரசங்கம் அற்புதமானது. இங்கே யாரெல்லாம் பாக்கியவான்கள் என்பதை பட்டியலிடுகிறார். அவர் பிரசங்கித்த இடத்தை உங்களுக்கு வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறோம். அந்த பிரசங்கத்தின் ஆழத்தை அறிந்து அதன்படியாக உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது" (மத்.5:3)



அவர் தம்முடைய சீஷர்களை அழைத்துக்கொண்டு ஜெபிக்கும்படியாக ஒரு மலைக்கு கடந்து சென்றார். அங்கு "மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டடார்கள் அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால், இங்கு உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான்" (மத்.17:3,4).



இயேசுவானர் தம்முடைய சீஷர்களுக்கு பரலோக பிதாவை நோக்கி எப்படி ஜெபிக்கவேண்டுமென கற்றுக்கொடுத்தார். "நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது; பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடையநாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்குவேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும் எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும் எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே" (மத்.6:13). உலகில் உள்ள பலமொழிகளில் இந்த ஜெபம் எழுதப்பட்டுள்ளது.




லாசருவின் கல்லறையினிடத்தில் இயேசுவந்து "கல்லை எடுத்துப்போடுங்கள் என்றார். மரித்தவனுடைய சகோதரியாகிய மார்த்தாள் அவரை நோக்கி: ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலுநாளாயிற்றே என்றாள்" (யோவா.11:39) அந்த இடம்தான் இது. இன்றும் அநேகர் பார்த்துச் செல்லும் திறந்த கல்றையாகவே இருக்கிறது. ஆனால் லாசரு மீண்டும் மரித்தான்.

-தொடர்ச்சியை 20 பக்கம் பார்க்க

## ஆராதனைக்கு செல்வது மிகச்சிரமமாயிருக்கிறது
## Going To Worship Is Too Much Trouble

-Betty



ஜனங்கள் தங்களுடைய வயோதிப நாட்களில் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் எழுந்து வேலைக்குச் செல்லுகின்றனர். சிலர் வயல்களுக்கு அதிகதூரம் நடந்து செல்கின்றனர், மற்றவர்கள் - சைக்கிள், மோட்டார் ஸ்கூட்டர், பஸ் அல்லது தங்களுடைய சொந்த கார் போன்றவற்றில் தங்களுடைய வேலைக்கு சவாரி செய்யலாம். ஆனால் ஒருவருடைய வேலை ஸ்தலத்திற்குச் செல்ல எடுத்துக்கொள்ளும் சிரத்தை மிகப்பயங்கரமானதாக இருக்கலாம். என்றாலும், ஒருவன் வாழவேண்டுமென்றால், உணவு வாங்குவதற்கும் வாடகை செலுத்துவதற்கு அல்லது வீட்டிற்கு வாடகை செலுத்துவதற்கும், தன்னுடைய பொறுப்பைவகிப்பதற்கும் அதன்பின் சம்பளம் பெறுவதற்கும் ஒருவன் கட்டாயம் வேலை செய்தாக வேண்டும்.

மாறாக, ஒரு புதிய வாரத் துவக்கத்திற்கு அடையாளமாகவும், தம்முடைய ஜனங்கள் தம்மிடத்தில் நெருங்கி வந்து சேவிக்கவும் ஒருவருக்கொருவர் நெருக்கமாயிருக்கவும் தேவன் தமக்கென்று ஒரு நாளை நியமித்திருக்கிறார். புதியஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் - நாம் ஞாயிறு என அழைக்கிற அந்நாளில் ஆராதிக்கும்படி கூடிவந்ததற்கான ஆதாரங்களையும், திருஷ்டாந்தங்களையும் நாம் கொண்டிருக்கிறோம்.

இருந்தபோதிலும், அசௌரியத்தோடும் ஆராதிக்கச் செல்லுமிடத்திற்கான செலவுகளினிமித்தமாகவும் தங்களை சிரமப்படுத்திக்கொள்ளுவது தேவையற்ற ஒன்று எனக் காண்கிற கிறிஸ்தவர்கள் உண்டு. சிலர், “நான் வீட்டிலே என்னுடைய ஜெபங்களை ஏறெடுத்துக் கொள்ளுவேன்” எனக் கூறி தங்களுடைய மனசாட்சியை சாந்தப்படுத்திக் கொள்கின்றனர். “ஆனால் வீட்டிலுள்ள என் வேலைகளை செய்வதற்கும், மார்க்கெட் செல்வதற்கும் ஒய்வெடுப்பதற்கும் எனக்கு ஒரே ஒரு நாள் மட்டுமே இருக்கிறது” என்ற வேறு காரணமும் உண்டு. தொடர்ந்து மற்றவர்கள் தாங்கள் ஆஜராகாத காரணத்திற்கு “பிரசங்கியாருடைய பிரசங்கம் சுவாரஸ்யமில்லாதிருக்கிறது”எனக்கூறி சபை ஊழியரை குற்றப்படுத்துவார்கள். ஆராதனையில் நான் எதையும் பெற்றுக்கொள்ளமுடியவில்லை- நான் வெறுமனே வீட்டிலே தங்கியிருப்பேன் எனக் கூறுகின்றனர்.

சிலருடைய குடும்பங்களில், கணவன் ஆராதனைக்குச் செல்லுவான், ஆனால் அவன் தன்னுடைய மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துச் செல்வதின் அவசியத்தை உணருவதில்லை. குறிப்பாக தன்னோடு கூட்டிச்செல்லும்போது உண்மையாகவே இது ஒரு பிரச்சனையா? அவன் தான் மட்டும் இப்போது ஆராதனையில் கலந்துகொள்ளுவோம், பிள்ளைகள் பெரியவர்களாகும் போது செல்லலாம் எனக் கருதுகிறான்.

இந்த எல்லாவிதமான சாக்குப்போக்குகளும் இந்த மன நிலைகளும் எத்தனை தவறானது தம்முடைய ஊழியம் முழுவதிலும் இயேசுவின் செய்தி "வாருங்கள் என்னைப்பின்பற்றுங்கள்" என்பதாகவே இருந்தது. அவர் ஒவ்வொரு காரியம் மற்றும் ஒவ்வொரு நபரைக் காட்டிலும் தமக்கே முதலிடம் கொடுக்குமாறு ஜனங்களைக் கேட்டுக்கொண்டார். மத்தேயு6:33ல் அவர் "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" என்றார்.

நாம் எவ்விதமான "சிரமம்" அல்லது 'அசௌரியம்' அல்லது "செலவு" போன்றவை அவரைப் பிரியப்படுத்தும்படிக்கு அவசியமானது என அவைகளைக்கடந்து செல்ல விருப்பமில்லாதவர்களாக இருந்தால் நாம் கிறிஸ்துவை முதலாவது தேட முடியாது அல்லது அவரைப்பின்பற்றவும் முடியாது.

எபிரெயர்10:25, "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்ல வேண்டும்" என விளக்குகிறது.

"சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்".

"மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன் படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்"

கிறிஸ்தவர் ஒருவருக்கொருவர் ஏன் கூடிவரவேண்டும் என்பதற்கு நியாயமான காரணங்கள் பல உண்டு.

**தேவனை ஆராதிக்க:** எபிரெயர்12:24 சபை கூடிவருதலைப் பற்றி ஒரு அழகான சித்திரம் வரைகிறது, "நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம்பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும்,பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற் பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும் ..... வந்து சேர்ந்தீர்கள்".

**கிறிஸ்துவின் தியாகத்தை நினைவு கூர:** அப்போஸ்தலர்20:7ல், பவுல் சபையோடு சேர்ந்து ஆராதிப்பதற்கு ஒரு வாரம் துரோவா பட்டணத்தில் தங்கியிருந்தான் என வேதவாக்கியம் கூறுகிறது; "வாரத்தின் முதல் நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்".

**கூடி ஆராய்வதன் மூலம் தேவனுடைய வார்த்தைகளை கற்றுக்கொள்ள:** "....சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிற வனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதை யாயிரு"(2தீமோ.2:15). ஏன்? ஏனென்றால், "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப் பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது"(2தீமோ.3:16,17).

**ஒருவரோடொருவர் ஐக்கியங்கொள்ளுவதின் மூலம் பெலனைப் பெற்றுக் கொள்ள:** "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்"(மத்,18:20). எபிரெயர்10:24ன்படி நாம் ஒருவருக்கொருவர் அன்பிலும் நற்கிரியைகளிலும் உற்சாக மூட்டுகிறவர்களாயிருக்கிறோம். நாம் சகோதரரை ஒருபோதும் சந்திக்காதவர்களாகவும், அவர்கள் செய்கின்ற பணிகளில் பங்குகொள்ளாதவர்களாயிருப்போமானால், நாம் எவ்வாறு சகோதரரை உற்சாகப்படுத்தி, பெலப்படுத்தக் கூடும்?

தேவனை ஆராதிக்கும்படிக்கு பரிசுத்தவான்களோடு கூடிவருவதை புறக்கணிக்கும் போது நம்முடைய வாழ்வில் சரியான சமநிலையைக் கொண்டிருக்க முடியாது ஒவ்வொரு சமயமும் ஒரு கிறிஸ்தவன் ஆராதனையைப் புறக்கணிப்பதையே தெரிவுசெய்கிறான், மேலும் அவன் தேவனையோ, ஆராதனையையோ சபையையோ தன் வாழ்வில் முதன்மையாக வைக்காத தன்னுடைய மாதிரியையே தன்னுடைய செல்வாக்கின் கீழ் இருப்பவர்களுக்கும் போதிக்கிறான். குறிப்பாக அவன் ஆராதனையிலும், வேதஆராய்ச்சியிலும், தேவனை அறியும் அறிவில் வளர்வதிலும் கலந்து கொள்ளாததின் மூலம் தன்னுடைய பிள்ளைகளின் ஆத்துமாக்களை ஆபத்திற்குள்ளாக்குகிறான்.

ஒரு வளர்ந்த கிறிஸ்தவன் தன்னுடைய சரீரத்தில் ஆராதனைக்குச் செல்ல இயலாத சூழ்நிலையை தான் ஒருபோதும் சபை கூடி வருதலை இழந்துவிடக்கூடாது என வெகு காலத்திற்கு முன்னமே தீர்மானித்து விடுகிறான். ஞாயிற்று கிழமையில் அவன் இவ்வினாவைப்பற்றிய எந்த ஒரு புதிய தீர்மானத்தையும் உருவாக்குகிறதில்லை; அவன் தான் தேவனுடைய ஜனத்தைச் சேர்ந்தவன் என்பதை அறிகிறான், அவன் தன்னுடைய சிருஷ்டிகரை துதித்து அவருடைய இரட்சிப்பின் மாபெரும் கிரயத்தை நினைவுகூருகின்றான். எனவே அவன் ஆராதிக்கும்படி சபை கூடிவரும்போது சபையோடு ஐக்கியம் கொண்டிருப்பான்.

நீங்கள் தேவன் அறிவுறுத்தியிருக்கிறபடி தேவனை ஆராதிப்பதின் முக்கியத்துவத்தைப் பற்றிய காரியத்தில் தவறான தீர்மானத்தை உருவாக்கி யிருப்பீர்களானால், தயவு செய்து திரும்பச் சென்று ஜெபத்துடனே உங்களுடைய தெரிந்து கொள்ளுதலைப் பற்றி சிந்தித்துப்பாருங்கள். ஆராதனைக்குச் செல்லுவது சிரமமாயிருக்குமானால், இதுவே தவறான ஒன்றும், உங்களுடைய நித்திய ஆக்கினையில் முடிவு பெறக்கூடிய ஒன்றாகவும் இருக்கிறது. உங்களுடைய இரட்சிப்பு மாபெரும் கிரயமாகிய தம்முடைய குமாரனின் மரணத்தில் தேவனால் நிறைவேற்றப்பட்டதாயிருக்கிறது.

‘ஒரே வழி’ தபால் வழி வேதபாடம்
**The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate**
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.



**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

## நான் யார்? – Who Am I?




- நான் எல்க்கானாவின் மகன்
- இளம் வயதிலே கர்த்தருக்குப் பணிவிடைசெய்தேன்
- என்னுடைய பிள்ளைகள் நியாயாதிபதிகளாயிருந்தார்கள்
- இஸ்ரவேலர் என்னிடத்தில் ஒரு ராஜாவை ஏற்படுத்த கேட்டனர்
- நான் ஏற்படுத்தின ராஜாவுக்காக துக்கித்தேன்
- என் பெயர் விசுவாச வீரர்கள் அட்டவணையில் இடம் பெற்றுள்ளது
- என் மரணத்திற்கு பின்பு ஒரு ராஜா என்னைச் சந்தித்தான்

## ஜெபியுங்கள்



- இம்மாதம் சென்னையில் நடைபெறவுள்ள வேர்ல்டு இவான்சலிசம் பைபிள் பள்ளி வகுப்புகளுக்காக....
- வாலிபர்கள் உலக மாயையிலிருந்து விடுபட...
- நாட்டை ஆளுகிற தலைவர்களுக்காக...
- காந்தியடிகள் பெற்றுத்தந்த சுதந்திரம் காக்கப்பட....
- நமது இதழின் வாசகர்களுக்காக...

"சபையார் பேதுருவுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள்" – அப்.12:5



- 15 ம் பக்கத்தொடர்ச்சி

இயேசுவானவர் ஜெபிக்கச்சென்ற இடத்தில் உள்ள ஒலிவ மரம். மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இன்றும் பலன் கொடுத்துக்கொண்டிருக்கிறது. இஸ்ரவேல் முழுவதும் காண்கிற இடமெல்லாம் ஒலிவமரங்களும் ஒலிவத்தோப்புகளையும் நாம் அதிகமாக காணமுடியும். இங்கு தயாரிக்கப்படும் ஒலிவ எண்ணெய் உலக அளவில் மிகவும் பிரசித்தி பெற்றதாக இருக்கிறது



"அவர் பகற்காலங்களில் தேவாலயத்திலே உபதேசம்பண்ணிக் கொண்டிருந்து, இராக்காலங்களில் வெளியே போய், ஒலிவமலை என்னப்பட்ட மலையிலே தங்கிவந்தார்" (லூக்.21:37). அவர் இரவெல்லாம் ஜெபத்திலே தரித்திருந்த இடம் இது. எருசலேம் ஜனங்கள் மனந்திரும்பவும். உலகமுழுவதிலுமுள்ள ஜனங்கள் தேவனுடைய சித்தத்தை புரிந்துகொள்ளவும் இரவெல்லாம் ஜெபித்துக்கொண்டுவந்தார்.



அவர் வைக்கப்பட்ட கல்லறை அது யோசேப்பின் கல்லறை. அவனுடைய தோட்டத்தில் அது வெட்டப்பட்டிருந்த புதிய கல்லறை. இங்கு திராட்சை தோட்டமும் ஒரு பெரிய திராட்சை ஆலையும் இருந்திருக்கிறது. அதனுடைய அடிச்சுவடுகள் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அந்நாட்களில் யோசேப்பு என்ற அந்தரங்க சீஷன். துணிந்து இயேசுவின் சரீரத்தை கேட்டு வாங்கி இயேசுவை அடக்கம்பண்ண அதனைக்கொடுத்தான். இன்று உலகத்திலே ஒரே ஒரு திறந்த கல்லறை எதுவென்றால், அது இயேசுவின் கல்லறை மட்டுமே. அவர் இங்கே இல்லை. அவர் உயிர்த்தெழுந்தார்.



நாற்பது நாட்கள் உயிரோடிருக் கிறவராக தம்மை காண்பித்து பின்பு ஒலிவ மலையிலிருந்து பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். "அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று: கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" (அப்.1:10,11). இந்த இடத்தி லிருந்து தான் இயேசு வானத்துக்கு ஏழுந்தளிப்போனார் எனச் சொல்லப்படுகிறது.

# கேள்வியும் வசன ரீதியான பதிலும்

1. **எது சத்தியம்?** - தேவனுடைய வசனமே சத்தியம் - (யோவான்17:17)
2. **ராஜரீக பிரமாணம் எது?** - உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக - (யாக்கோபு2:8)
3. **தேவன் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் எது?** - நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் - (1யோவான்2:25)
4. **கிறிஸ்துவின் பிரமாணத்தை எப்படி நிறைவேற்ற முடியும்?** - ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து - (கலாத்தியர்6:2)
5. **அன்பை எப்படி நாம் அறிந்துகொண்டோம்?** - அவர் தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்துகொண்டோம் - (1யோவான்3:16)
6. **எது அன்பு?** - நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு - (2யோவான்6)
7. **பிதாவையும் குமாரனையும் உடையவன் யார்?** - கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் - (2யோவான்9)
8. **எது நித்திய ஜீவன்?** - ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் - (யோவான் 17:3)
9. **முதல்முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு என்னபேர்வழங்கிற்று?** - கிறிஸ்தவர்கள் - (அப்போஸ்தலர்11:26)
10. **நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் யாருக்கே சொல்லுகிறது?** - நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம் - (ரோமர்3:19)




## *நீங்கள் இவ்விதழின் வாசகரா?*
## *அப்படியானால் உங்களுடைய பங்கு என்ன?*

- உங்கள் நண்பர்களுக்கும் இவ்விதழ்கிடைக்க அவர்களது முகவரியை அனுப்பலாம்.
- வாசகர்களை தெரிந்து கொண்டு அவர்களுக்கு சந்தா செலுத்தலாம்.
- உங்கள் பகுதியில் சபையாக கூடி இச்செய்திகளை வாசித்துக்காட்டலாம்.
- இவ்விதழின் ஆசிரியரை அழைத்து சுவிசேஷ கூட்டங்கள் நடத்தலாம்.
- இவ்விதழின் வளர்ச்சிக்காக ஜெபிக்கலாம்.
- உங்களுடைய கருத்துக்களை அவ்வப்போது தெரியப்படுத்தலாம்.
- மாதம் ஒரு முறை அலுவலகத்திற்கு வந்து உதவிடலாம்.

9443558041 / 6379350509

சிறுவர் பகுதி

# விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தியவர்கள்

வேத பகுதி: 1தீமோத்தேயு1:19,20



சிறுவர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய ஆண்டவரும் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்கள்.

முதல் நூற்றாண்டிலே விசுவாசமாகிய கப்பலை இமெனேயு, அலெக்சந்தர் போன்றோர் சேதப்படுத்தியதாக பவுல் விசுவாசத்தில் உத்தம ஊழியக்காரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். அப்படி எந்த விசுவாசமான கப்பலைச் சேதப்படுத்தினார்கள் என்ற கேள்வி உங்களுக்கு எழும்பும். சபையை விசுவாசமான கப்பல் என்று பவுல் குறிப்பிடுகிறார். விசுவாசிக்கிறவர்கள் இந்த கப்பலாகிய கிறிஸ்துவின் சபையில் இருப்பார்கள். நோவா ஒரு பேழையை உண்டுபண்ணினார் அதுவும் விசுவாசபேழைதான் ஏனென்றால் மழை இல்லாத காலத்தில் பேழையை கட்டினார். உலகம் ஜலத்தினால் அழியப்போகிறது என்று சொல்லியும் ஜனங்கள் நம்பவில்லை. தேவன் மழையை 40 நாள் வருஷிக்கப்பண்ணி வெள்ளம் வந்தபோது ஐயோ! ஐயோ! என்று சொல்லி கூக்குரலிட்டிருக்கக்கூடும். நோவாவும் அவனுடைய குடும்பத்தாரும் காக்கப்பட்டார்கள்.

இன்றைக்கு இந்த விசுவாசமான பேழையை அதாவது கப்பலை இமெனேயு, அலெக்சந்தர் போன்றோர் சேதப்படுத்துகிறார்கள். எப்படியென்றால் சபையில் பிரிவினையை ஏற்படுத்துவது, சபைக்கு மற்றும் ஞாயிறு பள்ளிக்கு போகமாட்டேன் என்று அடம்பிடிப்பது போன்ற செயல்களெல்லாம் கப்பலை சேதப்படுத்துவதற்குச் சமம். அப்படி சேதப்படுத்தினால் என்னவாகும்? கப்பல் தண்ணீரில் மூழ்கிவிடும் இல்லையா! அதைப்போல சபையை பாழடிக்க எண்ணம் கொள்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுங்கள் என்கிறார். பவுல், அப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தார். பிசாசு கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். ஆகையால் நாமும் அப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுப்போம். அப்பா, அம்மா சில சமயங்களில் நாம சொன்னபடி கேட்காவிட்டால் அந்த கரடிகிட்ட இவனை புடிச்சுகொடுத்திடுவோம் என்று சொல்லுவாங்க இல்லையா? ஆமாம் நாம விசுவாசத்தின் கப்பலை சேதப்படுத்தாது, அது விசுவாசத்தில் முன்னோக்கி செல்வதற்கு நாம் உதவியாயிருக்கணும். இருப்பீங்களா!

**மனப்பாட வசனம்**

“தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்”-1பேதுரு5:8

## வேத அறிவுப் போட்டி எண்: 278

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. உடன்படிக்கைக்குத் துரோகிகளாயிருக்கிறவர்களை எவ்விதமான பேச்சுகளினால் கள்ளமார்க்கத்தாராக்குவான்?
2. சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும்பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் எப்படி அடக்கப்படும்?
3. எப்பிராயீம் தகாத கற்பனையை மனதாரப் பின்பற்றிப்போனபடியால் அவன் ஒடுங்குண்டு, நியாயவிசாரணையில் என்னவாகிறான்?
4. ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்ட கிறிஸ்துவானவர் அந்த ஆவியிலே போய் எந்த ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்?
5. கர்த்தர் இரக்கமும், மனஉருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு என்ன செய்கிறவருமாயிருக்கிறார்?
6. அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டா?
7. வேகமானவன் தன் கால்களால் தப்பிப் போவானா? குதிரையின் மேல் ஏறுகிறவன் தன் பிராணனை இரட்சிப்பானா?
8. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் எப்படியிருக்கிறார்?
9. நீ எவ்வளவாய்ச் சங்கரிக்கப்பட்டுப்போனாய்! என்று எதைக்குறித்து தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது?
10. மாம்சத்திலே வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்களா?

## வேதாகம ஆய்வு... 62 சிம்சோன் – Samson



1. தாண் கோத்திரத்தை சேர்ந்தவன்
2. நசரேய பொருத்தனைக்குட்பட்டவன் – நியா.13:5
3. கர்த்தருடைய ஆவியினால் பெலன் பெற்றவன் – நியா.13:25
4. இஸ்ரவேலில் இவனும் ஒரு நியாயாதிபதி – நியா.16:31
5. இவனுடைய பெண்சாதி அவனுக்கு முன்பாக அழுது இவனுடைய பெலத்தை அறிந்துகொண்டாள் – நியா.14:16

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.

October 2023






ஆகஸ்ட் மாத கூட்டம் இடம் கெத்சமனே கார்டன்





Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
**The Word of Christ,**
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA




To

Postman Remarks (If Undelivered):

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA

love God
love people
be a servant

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan